தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஹு ஆடிமீ 4வ (19-7-'22.) | ப. 13.

ஓர் விளம்பரம்.

இப்போது நமது பத்திரிகைப் பன்னிரண்டு பக்கங்களுடன் வெளியாகி வருகின்றது. இந்தியாவைப் பற்றிய சமாசாரங்களே இதில் பெரும்பாலும் அடங்கியுள்ளன. மேலும் ஒவ்வொரு சாஸ்திரத்திலும் பண்டிதர்கள் பலர் எழுதிவருவார்கள். இதுவரையில் எழுதப்பட்டதெல்லாம் முழுவதும் ஆரம்பமே. இனியும் நாம் பதினாறு பக்கமாகப் பெருக்குவது, நமது நாட்டினரின் ஆதரவையே பொருத்தது. கல்கத்தா யூனிவர்ஸிடியில், சமீபத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைவரையில் எல்லா விஷயங்களும் பையன்களுக்கு அவர்களின் தாய்பாஷையிலேயே கற்பிக்கப்பட வேண்டுமென்று சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. வங்காளத்தில் எப்படி பெங்காலி பாஷை யெங்கும் வியாபித்துக்கொண்டாடப்பட்டு வருவதென்பதை நம் நேயர்கள் அறிந்திருப்பார்கள். அப்படியே நமது நாட்டிலும் தமிழ் செழித்தோங்க வேண்டுமென்றால், நாம் எல்லோரும் தமிழை மிக்கப் பெருமையுடன் கொண்டாடுவது முற்றிலும்வசியம். இத்தமிழ் உலகையும் நம்மிடம் அன்பு பாராட்டித்தமிழர்கள் ஆதரித்து வந்தாலொழிய, நமக்கென்ன உத்சாக மிருக்கக்கூடும்? இப்பகுதியையே மாதிரிக்காகத் தங்களுக்கனுப்பி யிருக்கின்றோம். இத்தமிழ் உலகு பத்திரிகையைத் தாங்களபேக்ஷிக்காவிடில், தயவுசெய்து நமக்குடனே தெரிவிக்கப் பிரார்த்திக்கிறோம். தாங்கள் ஒன்றையுமே எழுதாவிட்டால், அடுத்த பகுதி வி. பி. மூலம் தங்களுக்கனுப்பப்படும். மேலும் அதை தயவுசெய்து பெற்றுக்கொள்வீர்களென்றே நாம் நம்புகிறோம்.

கசு, பசுபதி அக்கிரஹாரம், மைலாப்பூர், மதராஸ்.

மானேஜர், தமிழ் உலகு காரியாலயம்.

THE TAMIL WORLD

WE have received from the Publisher, 16, Pasupati Agraharam, Mylapore, the first number of the "Tamil Ulagu" (Tamil World) a new Tamil weekly devoted to politics, literature and the arts. In politics it is an independent nationalist organ and gives its full support to the Bardoli programme. It is written in easy, elegant and popular Tamil and the first number contains very interesting articles on "The position of India in the last (Tamil) year". "The geological formation of the earth" and "The Empire of the mind" and a sympathetic review of the first two volumes of the late Mr. C. Subramanya Bharati's works which have just been published. The editorial "Ourselves" declares that the object of the promoters of the journal is to give adequate and permanent expression to the surging new life in the Tamil land. If further issues maintain the level of the first number, the journal deserves to succeed; and we wish it a prosperous career. The annual subscription is Rs. 5 and the half-yearly subscription Rs. 3.

'*The Daily Express*'

A New Tamil Weekly

WE commend to the reading public the "Tamil World," a new Tamil weekly published at Mylapore. The promise of the first and the second issues which we have received will gladden those interested in the new vernacular movement. Mr. Pattabhiraman, M. A. assisted by a number of talented and enthusiastic young men, will be the Editor. With Congress politics and wide sympathies with Science and Literature, we hope that the weekly will receive good support. The annual subscription of Rs. 5 is fair, as the get-up is quite attractive.

'*The Hindu*'

TAMIL WORLD

WE welcome with pleasure the first issue of the "Tamil World," a new Tamil weekly, published at Mylapore, which we gather, is the fruit of the conjoint labours of a group of brilliant young men with Mr. S. Pattabhiraman, M. A, as the Editor. The first issue is quite promising and the contents are varied and interesting. If the future numbers realise the promise of the first, with more of variety and less of scholarly length, the "Tamil world" would prove an asset.

'*The Swarajya*'

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப்படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப் பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ் பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பல வகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெறவேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

தபால் கூலியுள்பட. சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0

அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0

'தமிழ் உலகு' கார்யாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்

மைலாப்பூர், சென்னை.

ஓர் அறிவிப்பு.

ஸ்ரீமான் "ராமசந்திரர்" மிகுந்த கல்விச்செல்வம் வாய்ந்தவர். அவருடைய விருப்பத்திற்கு இணங்கியே அவரது பெயரை நாம் இப்போது வெளியிடவில்லை. மிக்கப் பெருந்தன்மையுடன் நமது பத்திரிகைக்கு இனி விஷயதானம் செய்து வருவதாய்ச் சொல்லியிருக்கிறார். அவர் எழுதி வருவதெல்லாம் ரஸமுள்ளதாகவே இருக்கும். அவைகளை நமது அன்பர்கள் பிரியத்துடன் படிப்பார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

விஷய அடக்கம்.

வியாசங்கள் (பத்திராதிபர் எழுதியது)

1. ஒரு ரகசியம் 107
2. H. H. ஆகாகான்—இளவரசர் சுற்றுப் பிரயாணம் 108
3. மௌல்வி ஹஸரத் மோகானி கேஸ் 109

பார்லிமெண்டில் இந்தியாவைப்பற்றிய விவாதம்

4. ஓர் மாறுதல் 110
5. லார்ட் வின்டர்டனது உபன்னியாசம் 110
6. Mr. பென்ஸ்பூர் கண்டித்தல் 111

ஸாஹித்யம்

7. புயற்காற்று (ஸ்ரீமான் V. நாராயண அய்யர் M.A., M.L., எழுதியது) 112
   மகாகவி டாக்டர் ரவீந்திர நாத் டாகூரின் "ரெக்" என்னும் கதையின் மொழிபெயர்ப்பு
8. ராமாயண சாரம்—ஒரு கண்டம் 114
   (ஸ்ரீமான் "ராமசந்திரர்" எழுதியது)

சாஸ்திரம்

9. குளிர்மையுள்ள வெளிச்சம் 114
   (பத்திராதிபர் எழுதியது)

ஹாஸ்யம்

10. சோதிடப்புலி சோணாசலம் 115
    (ஸ்ரீமான் "ராமசந்திரர் எழுதியது)

தமிழ் உலகு

துந்துபிஞு ஆடிமீ 4உ.

ஓர் ரகசியம்

சில மாதங்களுக்கு முன் பீஹார் மாகாணத்தில் கவர்னராயிருந்த லார்ட் ஸின்ஹா தனது உத்தியோகத்தைத் துறந்தார். அகாலத்தில் அவர் அப்படிச் செய்ததால், ஏதோ காரணமிருக்கவேண்டுமென்றே எல்லோரும் சந்தேகித்தார்கள். வைத்தியர்கள் இவரது தேகஸ்திதியைப் பார்த்ததும், நடுநடுங்கி, இவர் உடனே எல்லாவற்றையும் துறக்காதபக்ஷத்தில், நெடுநாள் ஜீவித்திருக்க முடியாதென சொல்லிவிட்டதாய்த் தெரிந்தது. இப்போது வைஸ்ராயின் கௌன்ஸிலில் மெம்பராயிருக்கும் டாக்டர் டேஜ் பகதூர் ஸப்ருவும் இவ்வாறாகவே தன் உத்தியோகத்தை விட்டுவிட நிச்சயித்திருக்கிறாரென இந்தியா கவர்மெண்டார் பகிரங்கபடுத்தியதை நமது அன்பர்கள் அறிந்திருப்பார்கள். ஸிம்லாவில் சீதோஷ்ணம் தனக்கு ஹிதத்தைச் செய்யவில்லை யாகையால், வைத்தியர் சொற்படி இவரும் நடப்பது முக்கியமாயிற்றாம். இவ்வருஷம் எப்படியாவது ஸிம்லாவில் காலங்கழிக்கக் கூடுமென்றும், ஆனால் மறுபடியும், அதாவது மறுவருஷம், தானங்கே வசிப்பது முடியாதென்றும் இவர் சொல்லிவிட்டார். இந்த ஜூலை மாதத்திற்குப் பின்னும், ஓர் மூன்று மாதம் ஸிம்லாவில் இவர் சகித்துக் கொண்டிருப்பது எதற்காக ? இது நமக்குப் புரியவில்லை. ஆகிலும் நாம் ஊகிப்பதற்கு இவ்விஷயம் இடம் தருகின்றது. இப்பதவிக்கு இவர் வரும்முன், இவருடைய சரித்திரத்தை யோசிக்குங்கால்எண்ணங்கள் சில மனதிலுதிப்பதை நாம் தடுக்கக்கூடவில்லை. காங்கிரஸ் கக்ஷியாருடன் நிரம்பவும் ஊக்கத்தோடு உழைத்து வந்திருக்கிறார். இந்த அம்சத்தில் லார்ட் ஸின்ஹாவைப்போல இவர் இருந்ததில்லை. கவர்னர் ஜெனரல் நிர்வாக சபையில் ஓர் ஸ்தானத்தையும் அடையாதிருக்கும்போது, 'நாஷனலிஸ்ட்' பக்கத்திலேயே இவர் இருந்து வந்தபடியால் C. I. D. போலீஸாரின் காவலுக்குட்பட்டவர்களுள் இவரும் ஒருவரே.

1916-வது வருஷத்தில் லக்நௌவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாஸபையை இவர் அலங்கரித்திருக்கிறார். மேலும் ராஜாங்க விஷயங்களில் Pandit மதனமோகன மாலவியாவின் பாராமரிப்பிலேயே இவர் வளர்க்கப்பட்டவராதலால், எளிதில் கவர்மெண்டாரின் வலையில் விழக்கூடியவரல்லவென்றே தோன்றுகின்றது. சென்றவாரம் 'ஹிந்து' பத்திரிகையில் ஐக்கியமாகாண சம்பவங்களைப் பற்றி ஓர் கடிதம் வெளியாயிற்று. அதில் இருப்பதெல்லாம் பெரும்பாலும் நிஜமாயிருக்கலாம். கவர்மெண்டாரிடம் உத்தியோகத்தைப் பெற்றுவிட்டதால் இந்தியர்கள் தேசபக்தியில் குறைந்தவர்களாகிவிட்டார்களெனச் சொல்வது தர்மமில்லை. சிறிதும் கபடமில்லாமலும், ஸ்வநயம் பாராட்டாமலும் இருக்கும் சில மேதாவிகள் மகாத்மா காந்தியின் வழியைப் பின்பற்றாததால், தேசத்திற்கு எள்ளளவும் துரோகம் செய்தவர்களாக ஆகமாட்டார்கள். முற்றிலும் அபிப்பிராயபேதத்திற்காக, நாம் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம்

டைவது யுக்தமல்ல. வைஸ்ராயின் கௌன்ஸிலில், இவர் அவ்வேலையை ஒத்துக்கொண்டது இந்தியாவுக்கு நன்மை செய்வதற்காக வென்றே பலர் எண்ணுகின்றனர். மகாத்மாவின் ஆணைகளை வேதத்திற்கு சமானமாகவே மதிக்கின்றவர்களுக்குள் பல சிநேகிதர்களும் இவருக்கு இருக்கிறார்கள். அவர்களும் இவரையோர் ருத்ராக்ஷப்பூனையென்று ஒருபோதும் நினைத்ததில்லை. தனது சக்தியால் இவர் இரக்கமற்ற சட்டங்களை எடுத்துவிட்டார். இந்தியா கவர்மெண்டில்இவரும் ஒருமெம்பராயிருந்ததால் தான், மகாத்மா காந்தி, அவர் எதிர்பார்த்தபடியே, அவ்வளவு துரிதமாய் பிடிக்கப்படவில்லையென ஓர் வதந்தி கிளம்புகின்றது. நாம் இதை நம்பமுடியாததற்கு இதில் ஒன்றுமில்லை.

லார்ட் ஸின்ஹாவும், டாக்டர் டெஜ் பகதூர் ஸப்ருவும் இப்பிரிடிஷ் ராஜாங்கத்தில், மனப்பூர்வமாய் தேசவிசுவாசத்துடன் கூடவே இருப்பார்களாகில், அவர்கள் வெகுகாலம் இந்தியாகவர்மெண்டாருடன் ஒத்துழைத்தல் சாத்தியமில்லையென நம்புகின்றோம். என்ன தானிருந்தாலும், இவர்களும், இவர்களைப் போன்றவர்களும், ஒருக்காலும் தமது தேசத்தைக் காட்டிக்கொடுக்க சம்மதியார். முழுவதும் ஆங்கிலேயர்களின் பக்ஷத்தில் நின்றொழிய, அவர்களுக்கு நெருங்கியவர்களாய் நாம் ஒருபோதும் ஆகமாட்டோம். இதைத் தான் இத்தருணத்தில் நாம் நன்கறியவேண்டும். ஐக்கியமாகாணத்தில், அக் கவர்மெண்டாரின் ஆஞ்ஞைகளை மீறியே Pandit மாலவியாவும் சமீபத்தில் நடந்திருக்கிறார். இதன் சம்பந்தமாக, இந்தியா கவர்மெண்டிலும் மேல்நடவடிக்கைகள் நடத்தும் விதத்தைப்பற்றி அதிகாரிகள் பிரஸ்தாபித்திருக்கக் கூடும். Pandit மாலவியாவையும் பிடித்து சிறையில் வைக்க, இவர் உடன்படாததே தனது உத்தியோகத்தை இப்பொழுது விட்டுவிட்டதற்குக் காரணமாக இருக்கலாம். அலகாபாத் லீடர் பத்திரிகையிலும், பயோனியர் பத்திரிகையிலும் இதைப்பற்றி எழுதியிருப்பதை நாம் உற்று நோக்கின், இவர் இவ்வாறு நடந்ததில், ஓர் ரகசியம் இருக்கவேணுமென்றே நமக்குப்படுகின்றது. டாக்டர், டெஜ்பகதூர்ஸப்ரு உத்தியோகத்தைத் துறக்க நேரிட்டது, தான் எதிர்பார்த்ததே யென இப்பயோனியர் பேபர் எண்ணுவதை நாம் கவனித்தல் தகும். இந்தியா கவர்மெண்டில் நடைபெறுவதெல்லாம் இப்பத்திரிகைக்கு எப்போதும் முன்னமேயே எட்டி வருவதை எல்லோரும் அறிந்திருப்பார்கள். இன்னமும், 'லீடர்' இல் உள்ள குறிப்பும் அர்த்த புஷ்டியுடையதாகவே இருக்கின்றது. அஃதென்னவெனில், "இந்தியாவின் க்ஷேமத்திற்காகவே இவர் இந்தியா கவர்மெண்டிலிருந்துகொண்டு எப்பாடு பட்டிருக்கிறாரென்பதை, வெளியே யிருப்பவர்கள் ஒரு போதும் அறியமாட்டார்கள். மகத்தான காரியங்கள் ஒன்றையும் இவர் இதுகாறும் நமக்குச்செய்யவில்லையென்றால், அஃது இவருடைய தாளாண்மையின்மையால் தான் என்று சொல்வதற்கில்லை. மேலும் ஸிம்லா சீதோஷ்ணத்தைப் பொறுக்க முடியாததாலேயே, தன்னுடைய பதவியை இவர் உண்மையாக விட்டு விட்டதைப் பற்றியும் எங்கும் பேசிக்கொள்வார்கள். 'ஸிம்லா' காரணமென்றால், இன்னும் மூன்று மாதகாலம் இவர் அங்கே தங்குவதெப்படி யெனவும் கேட்கப்படலாம். ஏன், இனிமேலும் இந்த உத்தியோகத்தை வகிப்பதால், இந்தியாவுக்கு எவ்விதத்திலும் பிரயோஜனமில்லை யென்பதைக் கண்டுவிட்டாரா? * * * * இவையெல்லாம் இதற்குக் காரணமாயிருக்காதென்றே நாம் நம்புகிறோம்." இப்படியாக, லீடர் பத்திரிகையில் ஆக்ஷேபணைகளும் சமாதானங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முள் சிலரை இந்தியா கவர்மெண்டார் என்ன தான் தட்டிக் கொடுத்து வந்தாலும், நாம் வேறென்பதையும், இங்கிலீஷார் வேறென்பதையும், ஞாபகத்தில் வைத்திருப்போம். பிறர் தயவில் வாழ்கின்றவர்களுக்கு, தாழ்வும் ஒரு நொடியில் வந்துவிடும். ராஜகிருஹங்களில் பிழைப்பவர்களைப் போலவே, இக்காலத்தில் இந்தியர்களும் உன்னதஸ்தானங்களை சுமந்து வருகிறார்கள். நம்முடைய கதியும் இதற்கு மேல் உயரவேண்டுமென்றால், நாம் நடக்கும் விதமும் வேறாகவே இருப்பது முற்றிலும் அவசியம்.

H. H. ஆகாகான்

H. R. H. வேல்ஸ் இளவரசர், சில மாதங்களுக்குமுன், இந்தியாவுக்கு வந்ததைப்பற்றிப் பேசும்பொழுது, H. H. ஆகாகான் "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையில் சிலவற்றை வெகு நன்றாக எழுதியிருக்கிறார். வேல்ஸ் இளவரசர் இந்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்புங்கால், எல்லா விமரிசைகளையும் பார்த்தனுபவிக்க இவருக்கு சமயம் வாய்த்தது. கடைசியாக கராச்சியில், இளவரசர், இந்தியர்களிடம் விடைபெற்றுப் போகும் போதும், H. H. ஆகாகான் அங்கே சகல வைபவங்களையும் கண்ணுற்றார். மேலும், பலவிடங்களில் இளவரசரின் வருகை எவ்வாறு ஜனங்களின் மனதில் பதிந்ததென்பதைக் காட்டுவதற்கு இவரது சிநேகிதர்கள் இவருக்கு வர்ணித்து எழுதியதையே ஆதாரமாகவும் எடுத்துக் கூறுகின்றார்.

இங்கிலண்டில் இருப்பவர்களும், இந்தியாவிலிருக்கும் பல ஆங்கிலேயர்களும் இந்தியர்களைப் பற்றிக் கொண்டிருக்கும் முழுவதும் தப்பானதோர் அபிப்பிராயத்தையே இவர் "டைம்ஸ்" இல் கண்டித்தெழுதுவது மிகவும் யுக்தமே. அரசர்கள் எல்லோரும் எக்காலத்திலும் இந்தியாவில் எல்லையற்றதொரு படாடோபத்துடனே தான் வெளிக்கிளம்புவார்களென இவர்கள் எண்ணுவது பிசகாகும். தமது பிரஜைகளுக்கு தரிசனம் கொடுக்க, யானை மீதும், புலி மீதும், காண்டா மிருகத்தின் மீதும் அம்பாரி வைத்து, அதில் ஆற அமர்ந்தே, இந்திய அரசர்கள் என்றைக்கும் பட்டினப் பிரவேசம் செய்வது வழக்கமில்லை. எப்பொழுதாவது, அதிசய காலங்களில் அம்மாதிரியாக ஊர்வலம் வருவார்களே யாகிலும், சாமான்ய சமயத்திலும் அப்படியே நடக்கமாட்டார்கள். ராஜபட்டணத்தில், ஜகத் கியாதிபெற்று விளங்கிய மீராவைப்பார்க்க ஆக்பர் மகா சக்கிரவர்த்தி மாறுவேஷத்துடன் போகவில்லையா? அவ்வாறே டான்ஸென் என்னும் தனது வித்வானுடன், யமுனா நதிக் கரையோரமாய் தியானத்தில் ஆழ்ந்திருந்ததோர் சங்கீத மூர்த்தியைக்காணவும் இவர் போனதாகச் சொல்லுகின்றார்கள்.

"இந்தியாவிலெனில், பிரஜைகளுடன் கலக்காமலே அரசர்கள் கம்பீரமாய் ஒதுங்கி நிற்பதில்லை. மிகவும் தாழ்ந்தவர்களிடத்திலும் பிரியமாய்ப் பழகுவதுமுண்டு. 1911ம் வருஷத்தில் டில்லி தர்பார் முடிந்ததும், கல்கத்தாவில் நமது சக்கிரவர்த்தி தனியாகவே சென்றதைப் பார்த்து எல்லோரும் களிப்படைந்தார்கள். ஏனெனில் அது தான் பிராசீனமான வழக்கம். வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது, பலவிடங்களில் தாராளமாய் ஜனங்களுடன் பழகியதை

நிரம்பவும் மெச்சுகின்றேன். பூனா நகரத்தில், குதிரைப்பந்தயம் பார்க்கையில், இவரும் மற்றவர்களைப் போல்அனுவளவும் வித்தியாசமின்றி நடந்தார். பம்பாய் நகரத்தைவிட்டு இவர் புறப்பட்ட தினத்தன்று ஆயிரக்கணக்காக ஜனங்கள் இவரைச் சூழ்ந்து கோஷித்தனர். பிரஜைகளுடன் நெருங்கிப் பழகுவதால் மன்னர்கள் எந்த தேசத்திலும் மெத்த சந்தோஷத்தையே கொடுப்பார்கள். வேல்ஸ் இளவரசர் தான் நடந்த விதத்தால், இந்தியாவிலிருக்கும் ராஜகுமாரர்களுக்கு ஓர் நல்ல பாடம் கற்பித்திருக்கவேண்டும். இக்காலத்தில் பெரும்பதவியிலிருப்பவர்கள் பகட்டுடன் தூரத்திலேயே ஒதுங்கி நிற்பார்களாகில், அவர்களிடம் உலகத்தார் வெகுகாலம் விசுவாசம் வைப்பதும் துர்லபமாகிவிடும். ஐரோப்பாவிலுள்ள அரசர்கள் இதை நன்குயறிந்திருக்கிறார்கள். இடலியிலும், ஹாலண்டிலும், ஆண்டு வருபவர்கள் ஜனங்களின் மனதை முழுவதும் கவர்ந்து விட்டனர்."

"விளையாட்டுகளில் இளவரசர் இவ்வளவு உத்ஸாகத்துடன் கலப்பதும் ஆச்சரியமே. அவரது அமைதியையும், ஆவலையும், தைரியத்தையும் இந்தியாவிற் பார்த்து வியக்காதவர்கள் இல்லை. வேடிக்கைகளும், விளையாட்டுகளும் இங்கிலண்டிலிருந்தே இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டனவென்று நினைப்பவர்களுமிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறு. வேல்ஸ் இளவரசர் மிகவும் அக்கரையுடன் பாராட்டிவரும் 'போலோ' என்னும் விளையாட்டு பெர்ஷியாவில்தான் முதலில் உண்டாயிற்று. யானை யேற்றம், குதிரையேற்றம், முதலான வேடிக்கைகள் இந்தியாவில் புராதன நாட்களிலும் உண்டு. சந்திர குப்தன் அசோகன், மொகலாய சக்கிரவர்த்திகள், சிவாஜி, இவர்களெல்லோரும் விளையாட்டில் மிக்க ருசியுள்ளவர்களே." '

"மகாத்மா காந்தி பக்கத்தைச் சேர்ந்தவர்கள் அநேகரிடம் நான் பேசியிருக்கின்றேன். அவர்களுக்குள் வேல்ஸ் இளவரசர்பால் அன்பும், மரியாதையுமற்றவர்கள் ஒருவருமில்லை. மாக்ஷிமைதங்கிய ஜார்ஜ் சக்கிரவர்த்தி இந்தியர்களுக் கனுப்பியதோர் செய்தியில் பின்வருமாறு, மிகுந்த உதார குணத்துடன், சொல்லியிருக்கின்றார்: 'எல்லா வேலைகளிலும் எனது புத்திரன், இன்று வரையில், உங்களிடம் மிகவும் அனுதாபம் காட்டியே வந்திருக்கிறார். இப்பொழுதோ நேரில் பழகி, இன்னும் கிட்டியதோர் பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கே அடங்காத ஆசையுடன் இந்தியாவுக்கு வருகின்றார். உங்கள் தேசத்தில் தனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு இவர் புறப்படுங்கால், இந்தியாவின் மீது இவருக்குள்ள பற்றுதலும், மேலும் உங்களுக்கு இவரிடம் இருக்கும் பக்தியும் விசுவாசமும், முன்னிலும் ஆயிரம் மடங்கு விருத்தியாகி விடுமென்றே நான் கோருகிறேன். சுபிக்ஷமும், ஞானமும், இந்தியாவில் எப்பொழுதும் கூடவே நின்று, மேன்மேலும் இந்தியர்களுக்குப் பேரையும், புகழையும் தரவேணுமென்பதே என் பிரார்த்தனையாகும். அகண்டமாயும், ஸ்வேச்சையுடனுமிருக்கும், இப்பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் இந்தியாவும் நிச்சயமாய் சிறப்புடன் விளங்கும். மேலும் இதன் க்ஷேமத்திற்காக நான் மிக்கக்கவலையோடு உழைத்துவருவது போலவே, எனக்குப் பின்னும் இவரும் திருவருளால் உழைத்தே தீருவார்.' இந்தியர்களுக்கு இச்செய்தியனுப்பிய ஜார்ஜ் சக்கிரவர்த்தி இன்னமும அமோகமாகவே இருக்கட்டும். ஆயின், வேல்ஸ் இளவரசர் சமீபத்தில் இந்தியாவுக்குப் போய்த் திரும்பி வந்ததின் சம்பந்தமாக, 'நான் ஒரு விஷயத்தைப் பற்றி இங்கே பேச விரும்புகின்றேன். 'நாஷனல் ரிவ்யூ' என்றதோர் பத்திரிகையில், பிரிடிஷ் ராஜ வம்சத்தி லுதித்தவர்களே இந்தியாவில் ராஜப்பிரதிநிதியாய் இருப்பது வெகு நன்றாயிருக்குமென்று, 15 வருஷத்திற்கு முன், நான் எழுத நேரிட்டது. இவ்வெண்ணம் இப்போதும் என் மனதில் குடிகொண்டிருக்கின்றது. மாக்ஷிமை தங்கிய ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் புதல்வர் ஒருவர் இக்காலத்தில் வைஸ்ராயாகத் தேர்ந்தெடுக்கப் படுவது நன்மை பயக்கும். ஐந்து வருஷமென்ற நிபந்தனையை எடுத்து விட்டு இந்தியாவிலேயே அவர் எப்பொழுதும் வசிப்பதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யலாம். ராஜ்ய நிர்வாகத்திற்கென்று, தற்காலத்தில் ஆண்டுவரும் கவர்னர் ஜெனரல் ஸ்தானத்தில் ஓர் பிரபலமான மந்திரியை நியமிப்பது யுக்தமாயிருக்கும். இவ்வேற்பாட்டைப்பற்றி நூற்றுக்கணக்கான சிநேகிதர்களிடம் நான் பிரஸ்தாபித்ததில், எல்லோரும் இதை அங்கீகரித்திருக்கிறார்கள். ராஜகுலத்திற் பிறந்தவர் வைஸ்ராயாகவும் இருப்பதால், அவரே இந்திய அரசர்களுக்கெல்லாம் தலைவராக விளங்குவார். மேலும் அவரிடத்தில் ஜனங்களுக்குப் பாசமும் அதிகமாகவே இருக்கும்."

ஹஸ்ரத் மோகானி

I. P. C. 121 ஸெக்ஷன்படி, ஆமதாபாத் டிஸ்டிரிக்ட்கோர்ட்டாரால் மாக்ஷிமைதங்கிய ஜார்ஜ் சக்கிரவர்த்தியை யெதிர்த்துப் போராட யத்தனித்ததற்காக தண்டிக்கப்பட்ட ஹஸ்ரத் மோகானி பம்பாய் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்திருந்தார். அங்கே இவர் விடுதலையடைந்ததைக் கேட்டு நாம் சந்தோஷமடைகின்றோம்.

சென்ற டிசம்பர் மாதம் காங்கிரஸ் சபையில், இவர் பேசியதோர் குற்றத்திற்காக, கவர்மெண்டார் இவரைப் பிடித்தார்கள். விஷயம் என்ன? இந்தியாவில் ஆங்கிலேயர்களின் கடுமையைபொறுக்க முடியாமற்போனால், இந்தியாவுக்கும் இங்கிலண்டுக்குமுள்ள பந்தத்தைத் தொலைக்கவேணுமென்று கூறியிருக்கிறார். இதுவே இவர் செய்த முக்கிய குற்றமாம். ஆகிலும் சீப்ஜஸ்டிஸ் ஸர் லலூபாய் ஷா, தனது அபிப்பிராயத்தில், மோகானி செய்த பிரசங்கம் குற்றமற்றதென்றே தெரிவித்தார். ஐரோப்பிய மகாயுத்தம் தொடங்குவதற்கு முன், அயர்லண்டுக்கு ஸ்வராஜ்ய சுதந்திரம் அளிக்கப்பட்டதேயாகில், அதைத் தாங்கள் நிச்சயமாகவே எதிர்ப்போமென்று, லார்ட் கார்ஸனும், இப்போது லார்ட் சான்ஸலர் பதவியிலிருப்பவரும், பிரிடிஷ் கவர்மெண்டாருடன் யுத்தம் செய்வதற்குத் தயாராயிருக்கவில்லையா? அப்போதும் இவர்களை அக்கவர்மெண்டார் ஒன்றும் செய்யாது சும்மாயிருந்தார்கள். தேச வித்தியாசத்தால், சட்டமும், சட்டத்திற்கு அர்த்தம் பண்ணும் விதமும் மாறிவிடுகின்றன. பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் இனிமேல் இந்தியர்கள் இருப்பதாகாதென Mr. C. F. ஆன்ட்ரூஸ் பகிரங்கமாய் எழுதிவந்ததும் ஏன் பெருத்த குற்றமாக நினைக்கப்பட வில்லை? Mr. ஆன்ட்ரூஸ் ஆங்கிலேயர் என்பதுதான் காரணமாகும். பிரிடிஷாரின் கொடுங் கோன்மை இந்நாட்டில் சகிப்பதற்கு அரிதாய் விட்டால், பிறகு நாம் எவ்வாறு நடக்கவேண்டுமென இவர் உபதேசித்தாரே தவிர், நாம்

எல்லோரும் உடனே இவர்களுடன் சண்டை செய்யவேணுமென்று தூண்டவில்லை. இந்திய அதிகாரிகளின் போக்கு எப்படிப்பட்டதென்பதை இந்த கேஸ் நன்றாகக் காட்டுகின்றது.

பிரிடிஷ் பார்லிமேண்டில் இந்தியாவைப்பற்றிய விவாதம்.

I

ஓர் மாறுதல்

இந்தியா சீர்திருத்த சட்டப்படி, லண்டனிலுள்ள இந்தியா மந்திரிக்கும் மற்றும் அவருக்குக்கீழ் வேலை பார்த்து வருபவர்களுக்கும், சம்பளம் பிரிடிஷாரின் பொக்கிஷத்திலிருந்தே கொடுக்கவேண்டுமென்று ஏற்பட்டது. அதற்குமுன் அப்படியில்லை. இந்தியாவிலிருந்துதான் இவர்களுக்கு சம்பளம் அனுப்பப்பட்டு வந்தது. ஒவ்வொரு வருஷமும், காமன்ஸ் சபையில் இந்தியாவைப்பற்றிப் பேசும் தினத்தன்று ஒருவரும் அங்கே இருக்க மாட்டார்கள். ஏனெனில், தாங்கள் செலுத்தும் வரியினின்றே செலவழிக்கப்பட்டாலொழிய, பிரிடிஷ் ஜனங்கள் எவ்விஷயத்தையும் கவலையுடன் கவனிப்பதில்லை. ஆயின் இப்போது இந்தியா மந்திரி முதலானவர்களுக்கு ஆகும் செலவை பிரிடிஷார் ஏற்றுக்கொள்வதால், இந்தியாவைப்பற்றியும், மற்றும் இந்தியர்களின் விவகாரங்களைப்பற்றியும் பார்லிமெண்ட் மெம்பர்கள் ஆவலுடன் பேசுகிறார்கள். சென்ற ஜூன் மாதம் 15ம் தேதி இந்தியாவின் சம்பந்தமாகக் காமன்ஸ் சபையில் ஓர் வாக்குவாதம் நடந்தது. அன்றையதினம் லார்ட் விண்டர்டன் பேசியதிலிருந்து, இந்தியாவுக்கு நன்மைகள் ஒன்றுமில்லையென நன்றாய் விளங்கிற்று.

இங்கிலண்டில், லிபரல், கன்ஸெர்வேடிவ், என்று இரு கக்ஷிகள் உண்டு. இவர்களுக்குள், ஒரு கக்ஷியைச் சேர்ந்தவர்களே, பொது ஜனங்களின் "வோட்" என்னும் பக்கபலம் தங்களுக்கு இருக்கும் வரையில், இங்கிலண்டில் ராஜ்யபாரம் நடத்தி வருவது வழக்கம். காலவித்தியாசத்தால் ஜனங்களுக்குண்டாகும் அதிருப்தியினாலோ, அல்லது வெறுப்பாலோ, ஒரு கக்ஷியார் தங்களுடைய சலுகையை இழக்க நேரிட்டால், மற்றொரு பக்கத்தார் உடனே முன்வந்து ராஜ்யபாரத்தை வகிப்பார்கள். ஐரோப்பிய மகாயுத்தம் நடந்தபோது, ஜெர்மனியை, யெதிர்ப்பது நிரம்பவும் கடினமாக ஆகிவிடவே, இங்கிலண்டில், இவ்விரு கக்ஷியாரும், தமது தேசத்தைக் காப்பாற்றுவதற்காக, ஒன்றுசேர்ந்து ராஜ்யத்தை நடத்த ஆரம்பித்தனர். தற்காலத்திலும் அப்படியே இவர்கள் ஐக்கியத்துடன் தானிருக்கின்றார்கள். இப்போது பிரதம மந்திரியாயிருக்கும் Mr. லாயிட் ஜார்ஜ் ஆதியில் லிபரல் கக்ஷியைச் சேர்ந்தவராயிருந்தாலும், இத்தருணத்தில் அவர் "கன்ஸர்வேடிவ்" மெம்பர்களாலேயே பெரும்பாலும் தாங்கப்படுகிறார். ஆதலால் இந்தியாவுக்கு ஸ்வராஜ்ய சுதந்திரங்கள் தகாதென்று பிடிவாதமாய் சாதித்துவரும் இக் கன்ஸர்வேடிவ் மெம்பர்களின் வழியையே, Mr. லாயிட் ஜார்ஜ் பின்பற்றுவது முக்கியமாயிற்று. ஏனெனில் இவர்களுடைய மனஸ்தாபத்தால், இப் பிரதம மந்திரி ஸ்தானத்தை அவர் நிச்சயமாய் இழக்க நேரிடும். சமீபத்தில் சில மாதங்களுக்கு முன் Rt. Hon. மாண்டேகுவை அவரது உத்தியோகத்திலிருந்து ஒரு நொடியில் தூரத்தினவர்களும் இக்கன்ஸர்வேடிவ் மெம்பர்களே. கிலாபத் விஷயமாய், துருக்கர்களுக்காக வாதித்த இந்தியா கவர்மெண்டாரின் துணிவைக்கண்டு இவர்கள் மிகவும் ஆத்திர மடைந்தார்கள். 'க்ரீஸ்' உடன் போர்புரிந்துவரும் துருக்கர்கள் நிமித்தம், இவ்வளவு கம்பீரமாக இந்தியா கவர்மெண்டார் பரிந்து பேசியதே, லார்ட் கர்ஸன் முதலான கன்ஸர்வேடிவ் தேவதைகளுக்குக் கோபத்தை மூட்டியது. மேலும் இவர்களைத் திருப்தி செய்வதற்காகவே, Mr. லாயிட் ஜார்ஜ், Mr. மாண்டேகுவைத் தூரத்திவிட்டு, அவருக்கு பதிலாய் லார்ட் பீல் என்பவரை இந்தியா மந்திரியாக நியமித்தார். லார்ட் பீல் கன்ஸர்வேடிவ் கக்ஷியைச் சேர்ந்தவர். லண்டனில் பிரிடிஷ் பார்லிமெண்டிலுள்ள கன்ஸர்வேடிவ் மெம்பர்கள் இந்தியர்களுக்கு பரம சத்துருக்களென்பதை நாம் முன்னமேயே சொல்லி யிருக்கின்றோம். இந்தியாவுக்காக Mr. மாண்டேகு செய்திருக்கும் சில நன்மைகளையும் இவர் வந்தவுடன் தொலைத்து விடுவாரெனத் தோன்றிற்று. உதாரணமாக, இந்தியாவிலேயே நெய்யப்பட்டுவரும் ஜவுளி முதலியவைகளின் வியாபாரத்தை மேன்மேலும் விருத்தியடையச் செய்வதே Mr. மாண்டேகு தனது கருத்தென்று பன்முறை கூறியிருக்கின்றார். இன்னும் அதற்காக பிரிடிஷ் வர்த்தகர்களோடு தீவிரமாய் இவர் சண்டையிட்டிருப்பதும் நமதன்பர்களின் ஞாபகத்திலிருக்கும். இஃதெல்லாவற்றையும் லார்ட் பீல் தனதிஷ்டப்படி மாற்றிவிட்டார். இந்தியாவின் க்ஷேமத்திற்காக, பிரிடிஷ் வர்த்தகர்களின் அதிருப்தியை இவர் சிறிதும் சகிக்கமாட்டாரென்றே காட்டியிருப்பது முற்றிலும் விபரீதமாயிருக்கின்றது. மேலும் இவருக்காகக் காமன்ஸ் சபையில் லார்ட் விண்டர்டன் இந்தியாவைப்பற்றிப் பிரசங்கம் செய்ததை நாம் உற்று நோக்கின், இப்போது நமக்குக் காலமில்லை யென்பது தெளிவாய் விளங்கும்.

II

காமன்ஸ் ஸபையில் லார்ட் விண்டர்டனது உபந்நியாஸம்

சென்ற ஜூன்மாதம் 15ம் தேதி யன்று, காமன்ஸ் சபையில், இந்திய மந்திரிக்காகவும் மேலும் அவருக்குக் கீழ்வேலைபார்த்து வருபவர்களுக்காகவும் பிடிக்கும் செலவுக்காக 75000 பவுன் சபையோர்களால் அனுமதிக்கப்படவேணுமென்று கேட்கப்பட்டது. அதின்மேல் இந்தியா உதவி மந்திரியாயிருக்கும் லார்ட் விண்டர்டன் பேசி முடிந்ததும், Mr. பென் ஸ்பூர் என்பவரும் கர்னல் வெட்ஜ்வுடும், இந்திய விவகாரங்களைப் பற்றிக் கண்டித்துப் பார்லிமெண்டில் பிரசங்கம் செய்தார்கள்.

இந்தியா கவர்மெண்டின் வரவு செலவைப்பற்றியும், கிலாபத்தைப்பற்றியும், மேலும் குடியேற்ற நாடுகளில் இந்தியர்கள் நடத்தப்படும் விதத்தைப் பற்றியும், I. C. S. உத்தியோகஸ்தர்களின் சுகாசுகங்களைப் பற்றியும், இந்தியா சீர்திருத்த சட்டத்தைப்பற்றியும், மகாத்மா காந்தியைப்பற்றியும் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கு முள்ள பந்தத்தைப்பற்றியும் லார்ட் விண்டர்டன் விஸ்தாரமாகப் பேசினார். "கிலாபத் சம்பந்தமாக' இந்தியாவிலுள்ள மகமதியர்களுக்குத் துருக்கி சுல்தானிடமிருக்கும் பற்றுதலை எல்லோரும் நன்கு அறிவார்கள். இவ்விஷயத்தை பிரிடிஷ் கவர்மெண்டார்

செவ்வையாய் அறிந்ததுடன், மகமதியர்களிடம் ஒருபோதும் மரியாதைக் குறைவாகவு மிருந்ததில்லை. மேலும் என்றைக்கும் அவர்கள் மதவித்தியாசம் செய்ய மாட்டார்கள்." கிலாபத்தைப் பற்றி இவர் இவ்வாறு பேசியது முழுவதும் விந்தையாகவே இருக்கின்றது. துண்டு துண்டாக்கப்பட்ட துருக்கி சுல்தான் ராஜ்யத்தை மறுபடியும் அவரிடம் ஐரோப்பிய அதிகாரிகள் கொடுத்துவிட வேணுமென்று கேட்கும்போது, 'இந்தியர்களின் பற்றுதலை நாம் நன்கறிவோம்,' என லார்ட் வின்டர்டன் கம்பீரமாய்த் தலையை ஆட்டுகின்றார்! இந்தியா கவர்மெண்டார் இக்கிலாபத் விஷயமாய் Rt. Hon. மாண்டேகூவுக்குக் கொடுத்த தந்தி என்னவாயிற்று? இந்தியாவிலிருக்கும் துருக்கர்கள் ராஜ்ய சம்பந்தமாய் மன்றாடி வருகையில், லார்டுவின்டர்டன் மதவித்தியாசத்தைப்பற்றிக் கதைபேசுவது வெகு அழகாயிருக்கிறது. பிரிடிஷ் பிரதம மந்திரியாகிய Mr. லாயிட் ஜார்ஜ், ஐரோப்பிய மகா யுத்தம் நடக்குங்கால், துருக்கி சுல்தானது ராஜ்யத்தைத்தான் தொடப்போவதில்லை யென்று வாக்குத்தத்தம் செய்யவில்லையா? இத்தருணத்தில் அதை லார்ட் வின்டர்டன் முற்றிலும் மறந்து விட்டது போல் நடித்தாலும், இந்திய மகமதியர்கள் எக்காலத்திலும் அவ்வாக்குத் தத்தத்தை மறக்கமாட்டார்கள். காரியங்கள் ஆகவேண்டு மென்றால் ஓர் விதமாய்ப் பேசுவதும், பிறகு அவைகள் முடிந்ததும் மற்றொரு விதமாகப் புரளுவதும், Mr. லாயிட் ஜார்ஜைப்போலொத்த ராஜ்ய தந்திரிகளின் தர்மமில்லை. 'கிலாபத்' விஷயத்தில் இப்படியே பேசி, லார்ட் வின்டர்டன் நம்மை ஏமாற்ற எண்ணியிருக்கலாம். ஆனால் அஃது ஒருபோதும் பலிக்காது.

"வெகு காலமாய் இந்தியாவில் அமைதியின்மை எங்கும் பரவிவந்தது, இப்பார்லிமெண்டில் மெம்பர்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். கலகங்கள் பல நேரிட்டபிறகே, மார்ச்சுமாதம், 10ம் தேதியன்று, Mr. காந்தி பிடிக்கப்பட்டார். உடனே அதிகாரிகளும் அவரை விசாரித்து, தண்டித்துவிட்டார்கள். தன்னுடைய குற்றத்தை Mr. காந்தி தானாகவே ஒத்துக்கொண்டதுடன், அவருக்கு விதித்த தண்டனையும் மிகவும் நியாயமென்றே அவர் சொல்லியிருக்கிறார். சிறையில் அவரை அடைத்தபின், அத்தேசத்தில் அமைதி அதிகமாகியே வருகின்றது. * *

Mr. காந்தியைப் பிடித்தது நாங்களல்ல. இந்தியா மந்திரியின் பொறுப்பை நாங்கள் (தானும், இந்தியா மந்திரியாகிய லார்ட் பீலும்) ஏற்றுக்கொள்வதற்கு முன்னமேயே, Mr. காந்தியைப் பிடிப்பதற்காக உத்தரவு பிறந்தாய் விட்டது. எங்களுக்கு முன் நடந்த சம்பவங்களுக்கு நாங்கள் எப்படி உத்தரவாதம் சொல்லக்கூடும்? Mr காந்தி ஓர் அவதார புருஷனென்று இந்தியர்கள் எல்லோரும் நினைத்து வரும்பொழுது, அவரைப்பிடிப்பது தப்பென்றே இந்தியா கவர்மெண்டார் எண்ணினார்கள். ஆகிலும், பிற்பாடு அவரது வழிகள் முற்றும் நேரானவை அல்லவென்றும், மேலும் அவைகளால் கெடுதிகளே இன்னமும் அதிகமாய் விளையக்கூடுமென்றும் இந்தியர்களின் மனதிற்பட்டவுடன், அவருடைய சலுகை யெல்லாம் பறந்து போய்விட்டது. அது தான் சமயமென்று, இந்திய அதிகாரிகள் அவரைப் பிடித்தனர்."

இப்படியாக லார்ட் வின்டர்டன், காமன்ஸ் சபையில், மகாத்மா காந்தியைப் பற்றிப் பிதற்றியிருக்கின்றார். பம்பாய் கவர்மெண்டார் தனக்கு விதித்த தண்டனையை மகாத்மா காந்தி மிகவும் நியாயமென்று சொன்னதாக நமக்குத் தெரியவில்லை. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் இதுகாறும் செய்து வரும் அக்கிரமத்தையே வெட்டை வெளிச்சத்தில் மகாத்மா காந்தி லோகத்தாருக்குக் காண்பித்ததைப் பற்றிப் பேச லார்ட் வின்டர்டனுக்கு வெட்கமாக இருந்திருக்கும். "இது தான் விஷயம்; இது தான் சத்யம்; மனச்சாட்சியென்பதொன்று தங்களுக்கு இருந்தால், தாங்கள் இந்த உத்தியோகத்தை விட்டுவிடலாம். இல்லாவிடில் எனக்கெவ்வளவு கடுமையாக விதிக்கக் கூடுமோ, அவ்வளவு குரூரமாய்த் தண்டனையை விதித்துவிட்டுச் செல்லுங்கள்."——இத்துவனியில், இந்தியா கவர்மெண்டாரைக் கண்டித்த மகாத்மா காந்தி தனது குற்றத்தை யெங்கே ஒத்துக் கொண்டிருக்கிறாரோ, அது நமக்குப் புரியவில்லை. இன்னும், மகாத்மாவின் செல்வாக்குக் குறைந்ததும், அது தான் சமயமென்று, இந்திய அதிகாரிகள் அவரைப் பிடித்துவிட்டதாகவும் லார்ட் வின்டர்டன் பேசுகின்றார். இதுவே நமக்கு மிக்க வியப்பை உண்டாக்குகின்றது. பணம் படைத்தப் பிரபுக்களும், வியாபாரிகளுமே தற்காலத்தில் இங்கிலண்டில் பிரதம மந்திரியாயிருக்கும் Mr. லாயிட் ஜார்ஜைத் தாங்கிவருவதால், இந்தியாவிலும் மகாத்மா காந்தியை இவர்களே ஆதரித்து வந்தாலொழிய, அவருக்குச் சலுகை யொன்றுமில்லை யென லார்ட் வின்டர்டன் எண்ணுகிறார் போலும்! இந்தியா கவர்மெண்டார் தன்னைப் பிடித்தார்களே யாகில், தேசம் முழுமையும் அமைதி நிறைந்திருக்கவேண்டு மென்று, மகாத்மா காந்தி இட்ட கட்டளைக்குக் கீழ்ப்படிந்தே இவ்வளவு கோடி ஜனங்களும் நடந்து வந்திருக்கிறார்கள். இதை லார்ட் வின்டர்டன் சற்று ஞாபகத்தில் வைத்திருக்கட்டும்.

III

Mr. பெஸ்ஸ்பூர் கண்டித்தல்

லார்ட் வின்டர்டன் உட்கார்ந்தவுடன், பின்பு லேபர் கக்ஷியைச் சேர்ந்தவரும், இந்தியாவுக்கு எப்போதும் ஹிதத்தையே நாடுகின்றவருமான, Mr. பென்ஸ்பூர் பிரசங்கம் செய்தார். அதிலிருந்து நாம் சில பாகங்களை பெ எடுத்தெழுதுகிறோம்.

"இந்தியாவின் சம்பந்தமாய், லார்ட் வின்டர்டன் இவ்வுபன்னியாசத்தைச் செய்து முடித்தது எனக்கு மிகவும் கவலையை யுண்டாக்குகின்றது. அவர் சொன்ன விஷயங்களுக்கும், அவர் பேசிய விதத்திற்கும், அவ்வளவாக நான் ஆக்ஷேபணைகள் சொல்லப்புகவில்லை. ஆனால், மற்றும் பல முக்கியமான விஷயங்களைப்பற்றி, அவர் ஒன்றும் சொல்லாமலேயே தள்ளிவிட்டது தான் பெரியதவறாகும். இந்தியாவில் ஒரு பயமுமில்லை யென அவர் நமக்குத் தேறுதல்கள் சொன்னாராகிலும், அங்கே நடந்ததெல்லாவற்றையும் நம்மிடமிருந்து மறைத்து விட்டாரென்றே நான் எண்ணுகிறேன். இந்தியாவின் வரவுசெலவு திட்டத்தைப்பற்றிப் பேசும்போது, அவர் முதலில் எல்லாம் முற்றிலும் கவலைக்கிடமாயிருப்பதென்றும், மேலும் கடைசியில் சகலமும் தானாகவே ஒழுங்காகி விடுமென்றும் கூறியிருப்பது எப்படி? இந்திய விவகாரங்களை இப்பார்லிமெண்டில் நாம் பரீக்ஷை பண்ணுகையில், இந்தியர்களின் அபிப்பிராயத்தையும் சற்றேனும்

நாம் கவனிக்காமலிருப்பது நியாயமல்ல. தவிரவும் கிரமமாகவே தற்காலத்தில் இந்தியர்கள் வேண்டும் ஸ்வராஜ்ய சுதந்திரங்களைப்பற்றியும் லார்ட் வின்டர்டன் ஒன்றும் பேசவில்லை. இந்தியர்களின் விஷயத்தில் கொஞ்சமும் தாக்ஷிண்யமின்றி இவர் இவ்வாறு நடந்து விட்டாரென்றே நான் சொல்லுவேன்." * * * * *

"சைன்யத்திற்காக, இந்தியாவில் இவ்வளவு அபரிமிதமாய் ஏன் செலவழிக்க வேண்டும்? அதற்குக் காரணங்கள் என்னவென்று லார்ட் வின்டர்டன் இப்போது நமக்குக் கூறமுடியுமா? இந்தியாவிலிருக்கும் பிரிடிஷ் போர் வீரர்களுக்காகவே, 1914ம் வருஷத்தில் பார்க்கிலும் 7,000,000 பவுன் பிரதிவருஷமும் அதிகமாகச் செலவாகின்றது. ஆயினும் 6000 பேர்கள் இப்போது குறைந்திருக்கிறார்கள். சைன்யத்தின் சம்பளத்திற்காகவும், போர்வீரர்களின் சௌக்கியத்திற்காகவும், இந்தியாவின் வரும்படியில் ஏறக்குறைய சரிபாதி செலவாகின்றதென்றால், இதை யார்தான் ஒப்புக்கொள்ளுவார்கள்?"

"லார்ட் வின்டர்டன் பேசியதை நான் உற்று நோக்குங்கால், இந்தியர்களிடம் நாம் கேவலம் தயவுபண்ணிவந்த காலம் போய்விட்டதென்பதை நாம் அவசியமாய் மறக்காமலிருக்கவேண்டுமென்றே தோன்றுகிறது. இக்ஷணத்தில் இந்தியாவில் எங்கும் க்ஷேமமும், அமைதியும் விருத்தியடைந்து வருகின்றனதென்றும், மேலும் Mr. காந்தியின் விஷமங்கள் ஓய்ந்து விட்டனவென்றும் லார்ட் வின்டர்டன் சொன்னார். ஆகிலும், இதைப்பார்க்கிலும் பிசகு ஒன்றுமில்லை. இந்த நிமிஷத்தில் Mr. காந்தி கக்ஷியைச் சேர்ந்தவர்கள் 20000 பெயர்கள் ஜெயிலில் இருப்பது நிஜமல்லவா? அவர்களுக்குள், மிக்க உயர்ந்தவர்களும், ஸத்தியம், கல்வி, சீலம், முதலிய மகாகுணங்கள் பொருந்தியவர்களும், இக்காமன்ஸ் சபையிலுள்ள மெம்பர்களைக் காட்டிலும் பெரும்பாலும் பெருமைவாய்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் கலகக்காரர்கெளெனில், இரண்டல்லது மூன்றுவருஷங்களுக்கு முந்தி அவர்களில் ஒருவரேனும் பிரிடிஷ் ஜனங்களை துவேஷித்ததில்லை. பின்பு அவர்களுடைய குற்றமென்ன? இங்கிலண்டை வேருடன் அறுக்கவா நினைத்தார்கள்? இல்லவேயில்லை. இந்தியாவின் நன்மைக்காக அவர்கள் பாடுபடுவதால்தான் இப்படி தண்டனை யடைந்தார்கள். சமீபகாலமாய் இந்தியர்கள் மேன்மேலும் ஸ்வயஆக்ஷி சுதந்திரத்தைத் தீவிரமாமாய் அபேக்ஷித்ததால், 1919-ம் வருஷத்தில் இந்தியா சீர்திருத்த சட்டம் ஏற்பட்டது. இன்னும் சில மாதங்களுக்குள் இந்தியா மந்திரியாயிருந்தவர் தங்களுக்குச் செய்திருக்கும் உபகாரத்தை இந்தியர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். ஆகிலும் அவரது உத்தியோகத்திலிருந்து அவர் துரத்தப்பட்டார். இருந்தாலும் Rt. Hon. மாண்டேகு இந்தியாவுக்காக செய்திருப்பது மகத்தானகாரியமே. பஞ்சாபில் நடந்த படுகொலைகளாலும், கிலாபத் விஷயமாய் வந்திருக்கும் மனஸ்தாபங்களாலும், Rt. Hon. மாண்டேகு சிரமப்பட்டதெல்லாம் அநேகமாய் வீணாகப்போயிற்று. இந்தியாவில் இப்போது உண்டாயிருக்கும் அமைதியின்மை, இந்தியர்கள் ஆங்கிலேயர்களை வேருடன் ஒல்லுவதால் அல்ல. இந்தியா கவர்மெண்டார் செய்துவரும் அக்கிரமமே காரணமாகும். இதைத்தான் இங்கே நிரம்பவும் வற்புறுத்த விரும்புகிறேன். * * * * *

முழுவதும் பலத்தில் நம்புகின்ற மேல்நாட்டார், Mr. காந்தியின் உபாயங்களுடைய சூக்ஷ்மத்தை ஒருக்காலும் அறியமாட்டார்கள். * * * * *

Mr. காந்தி பக்கத்திலிருப்பவர்களை பைத்தியம் பிடித்தவர்களென்று நாம் நிந்திப்பதால் பலன் என்ன? பல ஆயிரம் மனிதர்களை நாம் ஜெயிலில் அடைப்பதாலும், இதற்கு ஒருபோதும் பரிசாரம் செய்தவர்களாய் ஆகமாட்டோம். எங்கேயாவது அதிகாரிகள் ஒருவனுடைய எண்ணத்தைப்பிடித்து சிறையிலிட்டதை நாம் கேட்டதுண்டோ? மனவலிமையை எந்த வெடி மருந்துகள்தான் பொடியாக்கக்கூடும்? வெள்ளத்தால் கரை புரண்டோடும் ஆற்றின் நடுவே அணை போடுவதால் பயனில்லை."

"Mr. காந்தி கக்ஷியாருடைய மனோவன்மை மிகவும் பிரமாதமானது. அத்துடன் சமாளிப்பதும் எளிதல்ல. மேலும் கொடுங்கோன்மையினால், அயர்லண்டில் போலவே, இந்தியாவிலும் நாம் ஜயித்தல் ஒருபோதும் சாத்தியமாக மாட்டாது. கடுமையுடன் நடத்துவதாலேயே இவ்வுலகத்தில் ஒரு கவர்மெண்டாரும் தங்களிடம் அதிருப்தி யடைந்தவர்களை வென்றுவிட்டார்களென நாம் எப்பொழுதும் கேள்விப்பட்டதில்லை. Mr. காந்தியின் கக்ஷியிலிருப்பவர்களை பிரிடிஷ் கவர்மெண்டார் தங்களுடைய முழுபலத்தைக்கொண்டும் தோற்கடிப்பது முடியாத காரியமே. பிரிடிஷ் கவர்மெண்டார் தமது அகங்காரத்தைத் துறந்து, இந்தியர்களின் மனதை செவ்வையாய் அறிவார்களேயாகில், அதனால் இவ்விருவருக்கும் மிகவும் லாபமுண்டு. பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமுள்ள வித்தியாசங்களெல்லாம் ஒழிந்தே போகவேண்டும். குடியேற்ற நாடுகள் எல்லாவற்றிலும் இந்தியர்க்குத் தாழ்வு என்பதொன்று இருக்கும்வரையில், நமது ராஜ்யத்தில் அமைதியின்மையும் 'இருந்தே தீரும்." * * * * *

புயற் காற்று

(விரஜமோகனபாபுவின் குமாரன் இராமேசன் கல்கத்தாவில் சட்டப் பரீட்சைக்கு வாசித்து அங்கு அண்டை வீட்டு அந்நதபாபுவின் குமாரத்தி ஹேமநளினியைக் காதலித்திருக்கையில், அவன் தகப்பனார் திடீரென அவனை ஊருக்கழைத்துப்போய், வேறு இடத்தில் அவனுக்கு கல்யாணம் செய்வித்தபின், எல்லோருமாக திரும்பிவருகையில், அவர்கள் ஏறிவந்த ஓடங்கள் கவிழ்ந்து, இராமேசன் மட்டும் தனியே ஆற்றின் கரையோரமாய் மோதப்பட்டு மணற்றிட்டில் காணப்பட்டான். பிரக்ஞை பிறந்து அவன் சுற்றிப்பார்க்கையில் மணவாடைதரித்த ஓர் பெண்மணியை கண்டு, அவளே தான் மணந்த பெண்ணெனக்கொண்டு இரவு முழுதும் அவளுடன் காட்டில் பொழுதுபோக்கிய விபரங்களெல்லாம், முன் 'தமிழ்உலகு' இரண்டு பகுதிகளில் வரைந்துள்ளன.)

சற்று நேரத்திற்கெல்லாம் மீன் படகுகள் வெள்ளைப்பாய் விரித்து வெளிப்போந்தன. அவைகளில் ஒன்றை இராமேசன் கூவி அழைத்தான். அதிலிருந்த செம்படவரின் உதவியால் ஊருக்குப் போவதற்காக பெரியதொரு படகைத் தீர்மானம் செய்து புறப்படுமுன், போலீஸாருக்கு படகுகள் புயற் காற்றில் கவிழ்ந்த செய்தியைத் தெரிவித்து தன்னுடன் வந்தவர் என்ன கதி யுற்றனர் என்று அவர்களைத் தேடிப்பார்த்துத் தெரிந்து தன்னூருக்குச் சொல்லி யனுப்பும்படி திட்டம் செய்துவிட்டு அந்தப்பெண்ணைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டான்.

இராமேசன் படகு மூலமாய் ஊருக்குப்போய்ச் சேரு முன்னமேயே அவனுடைய தகப்பனார் மாமியார் மற்ற சுற்றத்தார்கள் இவர்களுடைய பிணங்கள் அகப்பட்டதாக போலீஸார் தெரிவித்திருந்தனர். ஒருவேளை படகு ஓட்டினேரில் சிலர் மட்டும் தப்பிப்பிழைத்தாரோ என்னமோ, அவன் கூட வந்த சுற்றத்தாரில் ஒருவர் கூடப் பிழைக்கவில்லை யென்று தெரிய வந்தது.

இராமேசனின் பாட்டிக்குத் தள்ளாத வயதாய் விட்டது. அவளைக் கல்யாணத்திற்குக்கூட அழைத்துச் செல்லவில்லை. அவள், தன்னுடைய பிள்ளை விரஜமோஹன பாபுவும் மற்ற சுற்றத்தாரும் இறந்துபோனார்கள் என்று கேள்விப்பட்டதும் அலறி அடித்துக்கொண்டு அழுதாள். இந்த பெருந்துக்கத்தில் பேரனையும் அவன் புது மனைவியையும் எப்படி நல்வரவு ஏற்பது? ஊரெங்கும் சுற்றத்தார் வீடுகளிலெல்லாம் அழுகைக்குரலே கேட்டது. சங்கத்துவனி முதலிய வரவேற்புச் சின்னங்கள் ஒன்றும் இல்லை. புதுப் பெண்ணை ''வா'' என்று உபசரிப்பார் இல்லை. வாஸ்தவத்தில், அவ்வூரார் இவளால்தான் இவ்வளவு கேடும் என்று அவளைக் கண்டாலே ஒதுங்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

சிராத்த காரியங்கள் முடிந்ததும் தன் மனைவியுடன் அந்த ஊரை விட்டுப் புறப்படவேண்டுமென்று நிச்சயித்தான். ஆனால் அது கூடவில்லை. தன் தகப்பனாரின் கொடுக்கல் வாங்கல் முதலிய லௌகிக விஷயங்களை ஒருவாறு முடித்துக்கொண்டு தானே புறப்பட முடியும். இதற்குள் அவனுடைய பந்துக்களும் பாட்டியும் ''நாங்கள் எங்கேயாவது தீர்த்தயாத்திரை போய் வந்தால்தான் எங்களுடைய துக்கம் ஒருவாறு ஆறும்; எங்களை யாத்திரைக்கு அனுப்பிவிக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொள்ளவே, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியதாயிற்று.

ஆனால், இவ்வித காரியங்களுக்கு இடையே ஏற்படும் அவகாசவேளைகளில் இராமேசன் சும்மா இருக்கவில்லை; காதற் கடமைகளை முற்றும் மறந்துவிடவில்லை. ஊரார் சொல்லிக்கொண்டபடி ஒன்று மறியாச்சிறுமி அல்ல தன்மனையாட்டி; ஏனெனில் இப்போது அவளைப் பார்த்தபின் சிலர் ''இவ்வளவு வளர்ந்த பெண்ணுக்கு இதுவரை கல்யாணமாகாதிருந்தது பிசகு'' என்று ஏசினர். ஆகையால் அவள் காதலுக்கு இசைந்தவளே; ஆனால் இராமேசனுக்கு பி. ஏ. பட்டம் பெற்றிருந்தும் தான் வாசித்த புஸ்தகங்களால் காதல் புரியும் விஷயத்தில் ஒரு சகாயமும் அடையவில்லை. அப்படிப்பட்ட வேலை தனக்கு சரியுமல்ல, சாத்தியமுமல்ல, என்று அவன் புத்தியில் தோன்றினபோதிலும், தன் புஸ்தகப்படிப்பு ஒரு இம்மிகூடப்பயன்படாது என்று அவனுக்குப் புலப்பட்டும், அவனது இருதயம் அந்தச் சிறுமியால் சென்றது; அவனுடைய கல்வித் தேர்ச்சியாற் கூட அவளுடைய காந்த சக்தி கடக்க முடியவில்லை. தன் மனதிலே அவளை என்றும் பிரியாத சகதர்ம்மசாரீயாகக் கருதுவான். காதலில் மயங்கிய அவனுடைய கண்முன் அவள் சற்றுநேரம் இளம்வயது கொண்ட நவ வதுவாகவும், உடன் பக்குவ வயதடைந்த பிராணநாயகியாகவும், பிற்பாடு தன் அருமை மக்களைப்பெற்றெடுத்த தாயாராகவும் இப்படியாக பலவித ஸ்வரூபங்கள் கொண்டு தோன்றுவாள். எப்படி ஓவியம் புனைபவன் ஒருவன் இடைவிடாத தியானபலத்தால் தன் அகக்கண்முன் தான் எழுதப்போகும் படத்தின் மாசற்ற பிம்பத்தைக் கண்டு களிக்கின்றானே, எப்படி கவிசிரேஷ்டன் தான் பாடப்போகும் செய்யுளின் குற்றமற்ற ஸ்வரூபத்தை மனக்கண்ணால் காண்கின்றானே, அப்படி இராமேசன் இந்தச்சிறுமியை தன் மனதிலுறையும் ஆனந்த வடிவாகக்கொண்டு, தன் வீட்டிற்கு சுகத்தையும் செல்வத்தையும் கொண்டு வருபவள் என்று களிப்புற்றான்.

தன் தகப்பனார் அரைகுறையாக விட்டுப்போன காரியங்களை முடித்துக் கொண்டு கிழவிகளின் தீர்த்த யாத்திரைக்கும் ஏற்பாடு செய்து விட்டுப் புறப்படுவதற்கு மூன்று மாதங்கள் ஆயின. இதற்குள் அயல் வீட்டாரில் சிலர் அவனுடைய மனைவியிடம் கொண்ட அருவருப்பை மறந்து சிநேகம் பாராட்ட ஆரம்பித்தனர். அவளை இராமேசனோடு சேர்த்துப்பிணைத்திருந்த கட்டும் வரவர இறுகிபலப்பட்டது. அவர்கள் இருவரும் சாயங்காலங்களில் மாடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பது என்ற ஒரு வழக்கமும் ஏற்பட்டது. அப்போது இராமேசன் உல்லாசமாய் விளையாடுவான். திடீரென அவள் பின்புறத்திலிருந்து பாய்ந்து, அவளுடைய கண்களை தன்கைகளால் இறுக்க மூடிக்கொண்டு அவளைத் தன் மார்பின்மேல் சாய்த்துக் கொள்வான். இராத்திரி சாப்பிடுவதற்குக் கீழே இறங்குமுன் அங்கே மாடத்திலேயே ஒரு வேளை அவள் தூங்கிவிட்டால் அவளை திடுக்கிட்டு எழும்படி குலுக்கியெழுப்பி அவள் வாயால் வசவு வாங்கிக் கொள்வான். ஒருநாள் அவள் பின்னலைப் பிடித்து இழுத்துக் கலைத்துக்கொண்டே இராமேசன்: ''சுசீலா, இந்த பின்னல் மாதிரி எனக்குப் பிடிக்கவேயில்லை.'' அதற்கு, அவள் ''இந்தாருங்கள், என்னை ஏன் எப்போதும் சுசீலா என்று அழைக்கிறீர்கள்,'' என்றாள்.

இராமேசன் ''இதென்ன கேள்வி! ஒன்றும் புரியவில்லையே'' என்று திகைப்புற்றதால் பேசவில்லை. ''அதிருஷ்டமும் மாறிவிடுமா? நான் பிறந்தது முதல் என் துரதிருஷ்டம் என் கூடவே வருகின்றது. நான் சாகும்வரை என் கூடவே வரப்போகின்றது'' என்றாள் வருத்தத்துடன்.

இராமேசன் மனம் திடீரென நடுக்குற்றது. அவன் முகம் வெளுத்தது. ஏதோ பெரும் பிசகு ஏற்பட்டு விட்டது என்ற உணர்ச்சி திடீமென உண்டாயிற்று.

இராமேசன்: ''ஏன் இப்படிச் சொல்லுகிறாய், பிறந்தது முதல் துரதிருஷ்டசாலி என்று.''

''கருப்பத்திலேயே தகப்பனார் இறந்துபோனார். பிறகு பிறந்து ஆறுமாதமாகுமுன் தாயாரும் போய்விட்டாள். சித்தப்பா வீட்டில் நான் படாத கஷ்டமெல்லாம் பட்டேன். கடைசியில், எங்கிருந்தோ நீங்கள் வந்தீர்கள் என்னைத்தேடிக் கொண்டு என்று கேள்விப்பட்டேன். உடனே இரண்டு நாளைக்குள் கல்யாணமும் ஆயிற்று. பிறகு நடந்ததெல்லாம் உங்களுக்கே தெரியுமே.''

இதைக்கேட்டதும் அப்படியே அயர்ந்து போய்விட்டான் இராமேசன்; தலையணைமேல் மெல்லச் சாய்ந்தான்; அப்போது சந்திரோதயமாயிருந்தது. ஆனால் நிலாவின் இன்பம் அவனுக்கில்லை; இன்னும் மேல்கேள்வி கேட்க நடுங்கினான். உண்மை தெளிவாக வெளிப்பட்டுவிடுமென்றோ! இதுவரைக் கேள்வியுற்றதையெல்லாம் கனவு, வீண் நினைவு, என்று மறந்துவிடப்பார்த்தான்; முடியவில்லை. தூங்கி எழுந்தவன் சிரம பரிகாரமாக விடும் இளமூச்சுப்போல தென்றல் மெல்லென வீசிற்று. பக்கத்துத் தோட்டத்திலிருந்த குயிலின் இனியகுரல் நிலவின் வழியே அவன் காதில் வந்து பொழிந்தது. ஆற்றோரத்தில் படகுகள் தங்கி நிற்கும் துறையினின்றும் படகுக்காரர்களின் பாட்டொலி கேட்டது. தான் பக்கத்திலிருப்பதைக்கூட மறந்தவன்போல் இராமேசன்

பேசாமல் அயர்ந்திருப்பதைக்கண்ட அந்தச்சிறுமி மெதுவாய் அவன் பக்கத்தில் இடித்துக்கொண்டு "தூக்கம் வந்துவிட்டதா, என்ன," என்று கேட்டாள். "இல்லை" என்ற சொல்லைத்தவிர வேறு பேச்சில்லை. அவளுக்குத் தூக்கம் வந்து விட்டது; கண்ணயர்ந்தாள். இராமேசன் மட்டும் அவள் அருகில் உட்கார்ந்து அவளைப்பார்த்த வண்ணமாய் இருந்தான். அவளுடைய தலையில் எழுதப்பட்ட விதியின் அறிகுறியொன்றும் அவளுடைய நெற்றிப்புறத்தில் காணவில்லை. இப்படிப்பட்ட சௌந்தரியத்திற்கு அவ்வளவு கொடிய விதி விதிக்கப்பட்டிருக்குமோ!

இராமாயண ஸாரம்

இராமன்

ஸ்ரீராமனது கதையைச் சொல்லப் புகுந்த கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பரே தன்னைப் பாற்கடலை முழுதும் நக்கிக் குடிக்க யத்தனித்த பூனைக்கு ஒப்பிட்டாரானால், மற்றவர்களின் தன்மையை சொல்லவேண்டுவதில்லை. ஆனால், இராமனது குணங்களில் மிகவும் சிறந்தவை இன்னவென்று ஓரிடத்தில்சேர்த்து கவி சொல்லியிருக்கிறார். அதாவது, இலங்கையில் அசோகவனத்தில் தன்னை மிகவும் வருத்திய அரக்கியர்கள் அயர்ந்து தூங்கக்கண்ட ஜானகியும் தனக்கு கணவனும் கடவுளுமான இராமனது குணங்களை நினைத்து வருந்துகிறாள். முதலில், தனக்கு இப்பெரும் துக்கங்கள் நேரிட்டதற்கு மூலகாரணமான கைகேயியின் வரன்களை ஞாபகப்படுத்திக் கொண்டுவந்த சமயத்தில்,இராமனுடைய எவ்வித குணங்கள் வெளிப்பட்டன வென்பதை எண்ணுகிறாள். தனக்குரிமையாகிய ராஜ்யத்தை தன் தம்பி பரதன் அடைகிறான் என்று கேட்டமாத்திரத்தில் முகம், மும்மடங்கு மலர்ந்து தனது கம்பீர ஸ்வபாவத்தை காட்டியது. அஃதன்றியும், தசரத மகாராஜன் ராஜ்ய பாரத்தை வகிக்கும்படி சொல்லியபொழுதும், பிறகு அதைத் துறந்து காட்டிற்கு செல்லவேண்டுமென்று கட்டளையிட்டபொழுது சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரைபோல் முகவிலாசம் வேறுபடாமல் இருந்தது சுகதுக்கங்களை ஸமமாக பாவிக்கும் தன்மையை விளக்கியது. பிறகு, காட்டிற்கு ஏகும் வழியில், வேடர்களுக்கரசனாகிய குகனைக் கண்டு, நீ எனக்கு யாரினும் இனிய நண்பனென்றும், லக்ஷ்மணன் உன் தம்பி, ஸீதை உன் கொழுந்தி, எனச்சொல்லி, தனக்கு சிநேகிதர்களிடத்திலுள்ள பிரியத்தையும் கௌரவத்தையும் காண்பித்தார். சித்திரகூடத்தில் தன்னைத் தேடிவந்த பரதன் சடைமுடி புனைந்து, மரவுரி உடுத்து நிற்பதைக்கண்டு மிகவும் இரங்கி தனக்கு உடன்பிறந்தோரிடத்தில் உள்ள அன்பை காட்டினாராம். வனத்தில் வசிக்கும் காலத்தில் சீதையை ஹிம்ஸித்த காக்கை வேடம்பூண்ட அசுரன்மேல் அஸ்திரத்தை பிரயோகம் செய்ய, அதற்கு பயந்து அவன் உலகெங்கும் சுற்றி வேறு கதி காணாமல், ராமனைச் சரணமென்றடைய அவன் உயிரைக் காப்பாற்றி, அடைந்தோரைக் காக்கும் தன்மையை வெளிப்படுத்தினார். இராமனது வீரம் வெளிப்பட்ட இரண்டு ஸமயங்கள் ஜானகியார் மனதில் தோன்றின. உலகத்தில் யாவராலும் எடுத்து அசைக்கமுடியாத சிவதனுஸை ஜனகருடைய ஸபையில், தலைக்கு சூட்டும் பொருட்டு எடுக்கும் பூமாலை போல், எளிதில் எடுத்து நாணேற்ற, அது அவன் உரனுக்கு ஆற்றாது முறிந்த ஓசை அண்டங்களை குலுங்கச் செய்ததாம். பிறகு பஞ்சவடீ தீரத்தில் சூர்ப்பனகையின் பொருட்டு தன்னை பகைத்து வந்த பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும் அவர்களுக்கு தலைவனாய் தேவர்களையும் முனிவர்களையும் வருத்திவந்த கரனையும் ஒரு முகூர்த்தகாலத்தில் தன்வில்லைக்கொண்டே விண்ணுலகுக் கேற்றிய செய்தியை நினைந்தாள். இது நிற்க; தந்தை இறக்கவும், தாய் இரங்கவும் உலகமுழுதும் விடாமல் தொடர்ந்து செல்லவும் தம்பி மந்திரிகள் முதலோர் தன்னை வற்புறுத்தி வேண்டவும், மயங்காது பிதாவின் சொல்லைத் தாங்கி, அவரைப் பொய்யனாக்காமல் இருக்கும் பொருட்டு, காட்டிற்குச் செல்வதையே கைப்பிடித்து தனக்கு தர்மத்தில் உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இவ்வாறான இராமனது சிறப்பான குணங்களை நினைந்து சீதை வருந்தினாளென்று கவி சொன்னார். இதில் ஒவ்வொரு குணங்களையும் பற்றி தனித்தனியே இராமனது சரித்திரத்திலிருந்தே எடுத்து வரையக் கூடும். ஆனால் இடம் போதாமையினால் சுருக்கி எழுதினோம்.

குளிர்மையுள்ள வெளிச்சம்

இக்காலத்திய பையன்களுக்குள் பெரும்பான்மையோர் கண்ணுபத்திரவத்தால் கஷ்டப்படுகின்றார்கள். விளக்கெண்ணை வெளிச்சம் யெங்கும் உபயோகபட்டு வருவதில்லை. படிப்பும் அதிகமாயும் கடுமையாகவுமாக ஆக "கிரோஸின்" வெளிச்சத்திலேயே பெரும்பாலும் படிப்பதால் சிறுவர்களுக்குக் கண் நோய் இருப்பது மிகவும் துர்லபமாகிவிட்டது. இவ்விஷயமாக சமீபத்தில், ப்ரின்ஸ்டன் யூனிவர்ஸிடியிலிருக்கும் ப்ரொபஸர் நியூடன் ஹார்வே என்பவர் ஓர் குளிர்மையான வெளிச்சத்தைக் கண்டுபிடித்திருக்கிறார் எனக் கேட்டு சந்தோஷமடைகின்றோம். எட்டு வருஷ காலமாய் இவர் இதன்நிமித்தம் ஓயாது ஆராய்ந்து வந்திருக்கிறார். மினுமினுக்கும் ஜந்துக்களிடம் இருக்கும் வஸ்துவைப்போலவே,ஓர்வகை சிறு மீன்களிடமிருந்து, 'லூஸிபெரின்' எனத்தான் பெயர் வைத்தழைக்கும் ஒரு திரவியத்தை இவர் செய்யமுடியும். இப்பதார்த்தத்தை, ஓர் இருட்டறையில், ஜலம் நிறைந்த கண்ணாடிப் பாத்திரத்திலொன்றில் போட்டுமற்றொரு ரகசியமான திரவியத்தையும் இத்துடன்சேர்த்தால்,அப்பொழுது நீலவர்ணமுள்ளதோர் குளிர்மையான வெளிச்சமுண்டாகின்றது. இதன் உதவியால், நான்கு அடி தூரத்தில் ஒருவன் படிப்பதும் சாத்தியமாம். இதையே சீக்கிரத்தில் Mr. ஹார்வே முழுவதும் பிரயோஜன முள்ளதாகச்செய்வார். குளிர்ச்சியைத்தரத்தக்க வெளிச்சமே இப்போது நமக்கு முற்றிலும் அவசியமாயிருக்கின்றது.

சாஸ்திர ஆராய்ச்சி விஷயங்களில் நாம்மேல் நாட்டாரிடமிருந்து நிரம்பவும் கற்றுக்கொள்ள வேண்டும். பணமிருந்தாலும், இல்லாவிட்டாலும் எல்லோரும் உத்தியோகத்திற்காக வென்று படித்துவருவது பிசகு. மேலும் இந்நாளில் எவ்வளவுதான் படித்திருந்த போதிலும், நம்வாலிபர்களுக்கு உத்தியோகங்களும்வெகுவாய்க்காணப்படவில்லை. இனிமேலாவது நம் சிறுவர்கள் "சாஸ்திர" சம்பந்தமாகவே முன்னிலும் பதின்மடங்கு கற்றுவரவேண்டும். இந்தியாவுக்கு ஸ்வராஜ்யத்தை விரும்பும்நாம் "சாஸ்திரப்" படிப்பிலும் ஆராய்ச்சிகளிலும் அபாரமான தேர்ச்சியை யடைந்தாலன்றி, இவ்விந்தியாவுக்கும் நாம் என்ன க்ஷேமத்தை செய்தல்முடியும்? சமீபத்தில், எப்பொழுதும் வீசிக்கொண்டிருக்கும் காற்றிலிருந்தே, மேல் நாட்டிலுள்ள பண்டிதர்கள் "எலெக்ட்ரிஸிடி" சக்தியை சம்பாதிக்கும் திறமை யடைந்திருக்கிறார்கள். ஆனால் இத்தேசத்தல் நாம் இதுகாறும் என்னசெய்திருக்கிறோம்? ஒவ்வொரு வழியிலும், தீர்மானத்துடன் விடாமல் உழைக்க ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தேவையாய் இருக்கையில், நாம் இப்படி உறங்குவது அழகாயில்லை.

சோதிடப்புலி சோணாசலம்

ஒரு நாள் சாயங்காலம் ஐந்து மணி சுமாருக்கு சென்னை தங்கசாலைத் தெருவின் வழியே செல்லுகையில், ஒரு வீட்டின் முன்சுவற்றில் 'சோதிடப்புலி சோணாசலம்' என்ற விலாசம் எழுதப்பட்டிருந்தது. இதைப் பார்த்தவுடன் என் பாலிய சிநேகிதனாயிருந்து பரீட்சை தேறாத காரணமாக வீட்டை விட்டோடிப்போனவனாயிருக்குமோ வெனச் சந்தேகமுற்றேன். அதைத்தீர்க்கும் பொருட்டு அவ்வீட்டில் நுழைந்தேன். கூடத்தில் ஒரு சீக்கு நாற்காலியில் உட்கார்ந்திருந்தவரைக் கண்டேன். அவர் தாடியும் மீசையுமாயிருந்ததால், அடையாளம் நன்றாய் விளங்கவில்லை. கண்கள் மாத்திரம் சிவப்பாயும் கூர்மையாகவும் காணப்பட்டன. நான் தயங்கிக்கொண்டு வாசற்படிக்கு உட்புறத்தில் ஒரு கால் வைத்துக்கொண்டு நிற்கையில், உள்ளிருந்தவர் 'என்னப்பா, ஏன், என்ன யோசிக்கிறாய்? நான்தான் சோணாசலம், தெரியவில்லையா!' என்றார். குரலைக்கேட்டதும் நன்றாய் ஞாபகம் வந்துவிட்டது. உடனே உள்ளே சென்று அவனருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து "இதென்ன வேஷமப்பா, யார் குடியைக் கெடுக்க இந்த ஆண்டி வேஷம் போட்டுக் கொண்டா' யென்றேன்.

இவன், 'ஆமாம், நான் வேஷம் போட்டதிருக்கட்டும். நீ யெதற்காக உன் பிராமண வேடத்தையொழித்து இந்த மாதிரி துரை வேஷம் பூண்டாய்' என்றான். என் வயிற்றுப்பிழைப்பிற்காக உத்தியோகஞ் செய்யவேண்டி யிவ்வேஷம் பூண்டேன், என்றேன். 'அப்படியானால் நானும் என் வயிறு வளர்க்கத் தான் இப்படிச் செய்தேனப்பா.' அது கிடக்கட்டும்; நீ ஆதியில் விளையாட்டாகப் பொய் சொல்லிக் கொண்டிருந்தது போதாதென்று ஜோசியம் என்று பெயர் வைத்து பொய் மயமாகச் சொல்ல ஆரம்பித்துவிட்டாயா என்ன?

அடே பொய்யென்று யார் உனக்குச் சொன்னார்கள். யாரோ தெரியாதவன் பேச்சைக் கேட்டு நீயும் அப்படிச் சொல்லாதே. இந்த ஊரில் வக்கீல் கோபாலமூர்த்தி அய்யரைக் காட்டிலும் படித்தவரும் புத்திமானு முண்டென்று நினைக்கிறாயா? இல்லையே. அவர் ஜோசியம் ஸரியென்று ஒப்புக்கொண்டால் மேற்பேச்சென்ன?

அவர் ஒப்புக் கொள்வா ரென்று நான் நம்பவில்லை. அப்படி அவர் ஒப்புக்கொண்டால் கூட நான் நம்ப முடியாது.

அடே, அவரைப்பார்க்கிலும் நீ யென்ன புத்திசாலியா? உடலைப் பிளந்து காட்டினாலும் செப்பிடு வித்தை யென்கிறாயே! உனக்கு வேறு அலுவலில்லாவிட்டால் சற்று இரு. கோபாலமூர்த்தி அய்யரே இவ்விடம் வரப்போகிறார். நேரில் பார்த்துக் கொள்.

இப்படிச் சொன்னவுடனே பூ! பூ! என்ற சப்தம் கேட்டது. மோட்டார் வண்டி வந்து வாசலில் நின்றது. உடனே உள்ளே அய்யரவர்கள் விரைவாய் நடந்து வந்தார். அவர் வருவதற்கு முன் நான் பக்கத்தில் திரை மறைவில் போய் உட்கார்ந்து கொண்டேன். வந்தவர் நாற்காலியி லுட்கார்ந்தவுடன், சோணாசலம் அவரைப்பார்த்து 'அய்யர்வாள் இவ்விடம் வந்த காரணம் எனக்குத் தெரியும்' என்றான். அவர் 'அதெல்லாம் மிருக்கட்டும், எனக்கு ஜோஸியத்தில் நம்பிக்கையில்லை' என்று சொன்னவுடன், சோணாசலம் 'எனக்கு சட்டங்களில் நம்பிக்கையில்லை' யென்றான்.

அய்யர்—ஏன் அப்படிச்சொல்லுகிறீர்.

சோ—தாங்கள் ஏன் அப்படிச் சொல்லுகிறீர்.

அய்யர்—ஒருஜோசியன் சொல்லியபடி மற்றொருவன் சொல்லுவதில்லை.

சோ—ஒரு வக்கீல் அல்லது ஒரு ஜட்ஜி சொல்லியபடி மற்றொருவர் சொல்லுவதில்லை.

அய்யர்—உம்முடன் வாதாட எனக்கு சாவகாசமில்லை. என் ஜாதகம் உமக்குத் தெரியுமா?

சோ—தெரியும். அதற்குப்பலன் சொல்லவா?

அய்யர்—அதற்காகத் தான் வந்தேன்.

சோ— கேளும் சாஸ்திரம் சொல்வதை,

கன்னியே யுதயமாகிக் கடகத்திற் காரி நிற்க
மன்னியே மதியந்தானும் மகரத்திற் சேர,
துன்னிய தாரணிக்கோர் தலைவனாவன்
பன்னியரிருவராகும் பாலகர் பலராம் காணே.

உம்முடைய சந்தேகம் நீங்கிவிட்டதா? உமது மனதில் எண்ணியபடி நடக்குமென்று தோன்றுகிறதா?

இதைக்கேட்டவுடன் அய்யர்வர்கள் பிரமித்து அசைவற்றிருந்து பிறகு சோணாசல மிடத்தில் ஏதோ ஒரு கடிதாசிப்பையில் ரூபாய் வைத்துக் கொடுத்துவிட்டுச் சென்றார். உடனே வெளியில் வந்து 'அடே, சோணாசலம், நீ எப்பொழுது பாட்டுக்காரம்பித்தாய்' என்றேன். அவன் 'பாடாமற்போனால், ஆரப்பா சாப்பாடு போடுகிறார்கள்' என்றான். 'நல்லது நான் பிறகு வந்து பேசிக்கொள்ளுகிறேன்' என்று அவனது துணிவை வியந்து வெளியே வந்துவிட்டேன்.

வேண்டும்
அளவு 27 × 17" மேற்படாத
பிரகடனங்கள்
ஜட்காவண்டி
டாப்பில் ஒட்டுவதற்கு
நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 3-8-0
வாரத்திற்கு ரூ. 15-0-0
MADRAS ADVERTISINGS.
10, Venkaier Street. Madras.

தமிழ் உலகு
(Tamil World)
ADVERTISEMENT RATES
(PER INSERTION)

Per	1	Page	Rs. 16
Per	$\frac{1}{2}$	Page	Rs. 9
Per	$\frac{1}{4}$	Page	Rs. 5

Apply to
The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

ச ஞ் சீ வ ா ஞ் ச ன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை, மார், முதுகு, இடுப்பு	வலி	தேள், பாம்புக், பூச்சிக், விஷக்	கடி	பல், கால், காது, கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணு எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்தரா ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிட்டெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

சுதேசியமானது! உபயோகமானது!!

அ மி ர் தா ஞ் ச ன ம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, ஸவ்வரிமான்ல் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.